செ.வெ.எண்: 348 நாள்: 11.06.2019

**18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் தொடர்பான புகார்களை தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய குழு அமர்விடம் தெரிவிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் தொடர்பான புகார்களை தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய குழு அமர்விடம் தெரிவிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

குழந்தைகள் உரிமைகளுக்கு எதிரான வன்கொடுமைகள், பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 18 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளின் கல்வி, உடல்நிலை, மருத்துவம், விடுதி சேர்க்கை, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து வகையான புகார்கள் மற்றும் குறைகளை கேட்டு தீர்வு காணுதல் தொடர்பாக தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் குழு அமர்வானது 21.06.2019 அன்று ஒரு நாள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

21.06.2019 ஆம் தேதி நடைபெறும் குழு அமர்வில் இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை, விருதுநகர், கன்னியாகுமாரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, சிவகங்கை, திண்டுக்கல், தேனி ஆகிய 10 மாவட்டங்களைச் சேர்ந்த குழந்தைகளின் குறைகள் தொடர்பான புகார்களை கேட்டறிந்து அதற்கான தீர்வு வழங்கப்படும்.

அதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் அனைத்து வகையான புகார்கள் குறித்து நேரிலோ அல்லது கடிதம் மூலமாகவோ 19.06.2019 மாலை 5.45 மணிக்குள் மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், புதுக்கோட்டை, தொலைபேசி எண் 04322-222270, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், முன்னாள் படைவீரர் மைய வளாகம், கல்யாணராமபுரம் 1 ஆம் வீதி, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை - 2, தொலைபேசி எண் 04322-221266 என்ற முகவரிகளில் நேரில் சென்று புகார் தெரிவிக்கலாம்.

மேலும் 21.06.2019 அன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெறும் குழு அமர்வில் தங்களது குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகள் குறித்து நேரில் சென்றும் புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**